பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரமோதூத ஹூ பங்குனி ௴ 22 உ. வெள்ளிக்கிழமை [05-04-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 132

# நானாட்டானில் 3 நாட்கள் மோதல்

## இடைவிடாது தொடர்கிறது; படையினரின் பல சடலங்கள் மீட்பு?

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

மன்னார் நானாட்டானில் தொடர்ந்து மூன்றாவது நாளாக விடுதலைப் புலிகளுக்கும் — ஸ்ரீலங்கா படைகளுக்கும் இடையில் கடும் மோதல் சம்பவங்கள் இடைவிடாது இடம்பெற்று வருகின்றன.

இச்சண்டையின் போது உயிரிழந்த பல படையினரின் சடலங்களை விடுதலைப் புலிகள் மீட்டிருப்பதாக அங்கிருந்து முதலில் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் இச் செய்தி எழுதப்படும் வரை அதனை ஊர்ஜிதம் செய்யமுடியவில்லை.

கடந்த திங்களன்று வங்காலை இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் நறுவிலிக்குளம், அச்சன்குளம் ஆகிய பகுதிகளுக்கு முன்னேறினர். அங்கிருந்து அவர்கள் நானாட்டான் பகுதிக்குச் செல்ல முற்பட்ட போதே மோதல்கள் ஆரம்பமாகின சண்டை தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

மூன்று நாட்கள் நடந்த மோதலில் இராணுவத் தரப்பில் பெருஞ்சேதம் ஏற்பட்டதாக நம்பப்படுகின்றது.

செவ்வாய் இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள்

3 ஆம் பக்கம் பார்க்க]

## முத்தமிழ் விழா ஒத்திவைப்பு!

விடுதலைப் புலிகளின் கலை, கலாசாரப் பிரிவினர் நாளை முதல் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை மானிப்பாய், புங்குடுதீவு, சாவகச்சேரி, நெல்லியடி பிரதேசங்களில் நடத்த இருந்த முத்தமிழ் விழா தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இவ்விழா மே மாதம் முதல் வாரத்தில் நடைபெறும் என விடுதலைப் புலிகளின் கலை கலாசாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர். [உ]

## ஈழத்தமிழர் பிரச்சினை; பேச்சுகள் மூலம் தீர்வு!

### இந்திய ஜனாதிபதி நம்பிக்கை

புதுடில்லி, ஏப் 5

இலங்கை, வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சண்டையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணும் முயற்சிகள் தொடரும் என்று தாம் நம்புவதாக இந்திய ஜனாதிபதி வெங்கடராமன் நேற்றுத் தெரிவித்தார்.

இந்தியாவுக்கான இலங்கைத் தூதராக நியமிக்கப்பட்டிருக்கும் நெவில் கனகரத்ன தமது நியமனப் பத்திரங்களை ஜனாதிபதியிடம் கையளிக்கும் வைபவம் நேற்று இடம்பெற்றது.

அந் நிகழ்ச்சியிலேயே திரு. வெங்கடராமன் முன் கண்டவாறு தெரிவித்தார்.

''நீண்டகாலமாக நிலவிவரும் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு விரைவில் அமைதித் தீர்வு காண வேண்டியது அவசியமாகிறது'' என்றும் அவர் சொன்னார்.

இலங்கைத் தூதர் கனகரத்னா பேசுகையில் ''தமிழர் பிரச்சினைக்கு அனைத்துத் தரப்பினரும் ஏற்கக் கூடிய திருப்திகரமான தீர்வு காணப்படும்''—என்று சொன்னார்.

## திருமலையில் பல தமிழர்கள் புதனன்று வெட்டிக்கொலை?

நேற்று முன்தினம் நண்பகல் 11 30 மணியளவில் திருகோணமலை நகரம் மற்றும் சிறிமாபுரம் பகுதிகளில் வைத்து பல தமிழர்களை ஸ்ரீலங்கா இராணுவத்தினரும் சிங்களக் காடையர்களும் சேர்ந்து வெட்டிக் கொலை செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

எத்தனை பேர் இவ்வாறு கொலையுண்டனர் என்பது குறித்து விரிவான தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை. [உ]

## மக்களின் துயரம் நீங்க இன்று சர்வமதபிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

தமிழ் மக்கள் படும் துயரங்கள் நீங்க இறையருள் வேண்டி நடாத்தப்படும் சர்வ சமயக் கூட்டுப் பிரார்த்தனை இன்று மாலை 4-00 மணிக்கு நடைபெறவுள்ளது.

நல்லூர் திவ்வியஜீவன சங்க மண்டபத்தில்நடக்கும் இந்தக் கூட்டுப் பிரார்த்தனையில் சைவ சமயம், தென்னிந்திய திருச்சபை, மெதடிஸ்த திருச்சபை, இலங்கைத் திருச்சபை ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த மதகுருமார்களும் கலந்து கொள்வர்.

நல்லை குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள். பேரருட்திரு. டி ஜே. அம்பலவாணர், வண. எஸ் பி. நேசகுமார், வண. கே பி. கோவிந்தராஜ் ஆகியோர் சர்வமத பிரார்த்தனை குறித்து விடுத்துள்ள செய்தியில், இன்றைய பிரார்த்தனையில் பங்குபற்றுமாறு எல்லா மக்களையும் கேட்டுள்ளனர்.

## படையினரின் சடலங்கள் நேற்று மக்கள் பார்வைக்கு!

காரைநகர் பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவத்தினர் எட்டுப் பேரின் சடலங்களும் மற்றும் அந்தத் தாக்குதலின் போது புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும் நேற்று நல்லூர் முத்திரைச் சந்தைப் பகுதியில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான மக்கள் அவற்றைப் பார்வையிட்டனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் களப்பலியான வீரவேங்கை கண்ணனின் புகழுடம்பும் அங்கு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

மீட்கப்பட்ட இராணுவத்தினரின் சடலங்களில் ஒன்று உருக்குலைந்த நிலையில் காணப்பட்டதால் அச்சடலம் மக்களின் பார்வைக்கு வைக்கப்படவில்லை எனத் தெரிய வந்தது.

இச் சடலங்களை மனிதாபிமான அடிப்படையில் ஸ்ரீலங்கா அரசிடம் ஒப்படைப்பு குறித்து விடுதலைப் புலிகள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி வருவதாகவும் அறியவந்தது. இச்சடலங்கள் இன்று காலை 8 மணிக்கு செஞ்சிலுவை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [உ-எ]

## வல்வையில் கலிபர் வேட்டு!

நேற்றுப் பிற்பகல் 2-30 மணியளவில் வல்வெட்டித்துறைக் கடற்பகுதியில் சென்றுகொண்டிருந்த விசைப்படகு ஒன்றிலிருந்து குடியிருப்புப் பகுதிகளை நோக்கி 50 கலிபர் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. பெரும் சேதம் ஏதும் ஏற்படவில்லை. [உ]

## ஈழ அகதிகள் தப்பி ஓட்டம்!

சென்னை, ஏப். 5

தமிழ்நாடு, புழல் அகதிகள் முகாமில் இருந்து பத்து ஈழத் தமிழ் அகதிகள் தப்பி ஓடிவிட்டனர் என்று சென்னைப் பொலீஸார் தெரிவித்தனர்.

தப்பி ஓடியவர்களில் எட்டுப் பேர் ஈ. பி. ஆர். எல். எப் அமைப்பைச் சேர்ந்தவர்கள் ஏனைய இருவரும் புளொட் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## முச்சந்தி முரளி



உதைக் கனிக்க உவ்வளவு

## வவுனியாவில் பரவலாக பொம்மர், ஹெலித் தாக்கு!

யாழ்ப்பாணம், ஏப். 5

கடந்த மூன்று நாட்களாக வவுனியாவின் பல பகுதிகளிலும் பரவலாக பொம்மர், ஹெலித் தாக்குதல்களும், ஷெல் தாக்குதல்களும் இடம்பெற்று வருகின்றன.

கடந்த செவ்வாய் காலை முதல் சாலம்பைக்குளம், பம்பைமடு, ஸ்கந்தபுரம், பூவரசங்குளம் ஆகிய பகுதிகளில் பரவலாக பொதுமக்களின் குடியிருப்புகள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதனால் இப் பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கானோர் இடம் பெயர்ந்துள்ளனர்.

பொதுமக்கள் விட்டுச் சென்ற உடைமைகளை அபகரிப்பதிலும் வீடுகளை அழிப்பதிலும் படையினர் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலையிலும் பரவலாக பொம்மர் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இதற்கிடையில் புளிதறித்த புளியங்குளத்தில் இருந்து இராணுவத்தினர் நேற்று முன்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## காரைநகர்ப் பகுதியில் கடும் விமானத் தாக்கு!

யாழ்ப்பாணம், ஏப். 5

காரைநகர்ப்பகுதியில் நேற்று அதிகாலை 1 மணியிலிருந்து தொடர்ச்சியாக குடியிருப்புப் பகுதிகளை நோக்கி பலத்த விமானத் தாக்குதல்களும், ஷெல், பீரங்கித் தாக்குதல்களும் இடம் பெற்று வருகின்றன.

அதிகாலை 1 மணியிலிருந்து காலை 7-30 மணிவரை விட்டு விட்டு 15க்கும் மேற்பட்ட பீப்பாய்க் குண்டுகளை அவ்ரோ விமானம் வீசியது.

அதிகாலை 2-15கிற்கு அப்பகுதிக்கு வந்த ஹெலிக்கொப்டர் தொடர்ச்சியாக கலிபர் தாக்குதலை மேற்கொண்டிருந்தது. இடை

[3 ஆம் பக்கம் பார்க்க]

## படையினர் இழப்புக் குறித்து அரசின் நம்பமுடியாத தகவல்

### பி. பி. ஸியின் கணிப்பு இது

கொழும்பு, ஏப் 5

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளுடனான சண்டையில் உயிரிழக்கும் படையினரின் எண்ணிக்கை குறித்து அரசு கொடுக்கும் தகவல்கள் நம்பமுடியாதவையாக இருக்கின்றன.

பி.பி.சி. வானொலி தனது கொழும்புச் செய்தியாளரை ஆதாரங்காட்டி நேற்று இவ்வாறு தெரிவித்தது.

காரைநகர் கடற்படைத் தளம் மீது புலிகள் தாக்குதல் நடத்தி வருவது பற்றிய செய்தியை அறிவித்த பி பி சி

[3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஆரம்ப சுகாதார வழிகாட்டி பேராசிரியர் த. இராமதாஸ் F. R. C P, D.C.H. [குழந்தை வைத்தியத்துறை, மருத்துவ பீடம்] எழுதியது: கல்லூரி, நூலகங்கள் மற்றும் முதலுதவி போன்ற அனைத்து சுகாதாரப் பகுதியாளர்களுக்கும் ஓர் அரிய புத்தகம். வெளியீடு: உதயன் வெளியீட்டகம். விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி/4822]

### தேவை

பெண்கள், குழந்தைகள் அனைவரது உடைகளையும் மிகவும் நாகரீகமான முறையில் வெட்டித் தைக்கக்கூடிய பெண் டெயிலர் உடன் தேவை. நேரில் வரவும் திருமகள் டேர்ஸ், [கல்வியங்காடு சந்தை அருகில் உள்ள பெற்றோல் செட்முன்] கல்வியங்காடு சந்தை. [16352]

### A/L வினா - விடை

10 வருட A/L வினா–விடை அரசியல் மூலதத்துவங்கள், பொருளியல், வணிகமும், நிதியியலும் சொற்ப பிரதிகள் வெளிவந்துள்ளன. புத்தகக் கடைகளில் பெறலாம். [16354]

### நோவு எண்ணெய்

ஓட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெய், எஸ் ரி. மெடிக்கல்ஸ் 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். [3889]

### சோதிட மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். ''சக்தி சரவணா'' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக] தினசரி பகல் 9 மணி தொடக்கம் 3 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. [16278]

### புதிய வகுப்புகள்

கம்பியூட்டர் – Basic S. L. E. A. S, Short - Hand & Typing, I. A. B. ஆரம்பம்: 06 - 04 91: 8-30 மணி School of Business Administration, 16. 3ம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். [சி/5919]

### நாவல்கள் இலவசம்

வித்தியாசமான கதைகளில் கருத்தில் சிறந்த நாவல்களான மீரா வெளியீடுகள் 140/-ரூபாவுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/-ரூபாவுக்கு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. துர்க்கா சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி, யாழ்ப்பாணத்தில் சகல புத்தகசாலைகளிலும். [16357]

## உற்சவங்கள் ஒத்திவைப்பு

இன்று 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாக இருந்த நயினை செம்மணத்தம்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் தற்போதைய சூழ்நிலை காரணமாக பின்போடப்பட்டுள்ளது.

* * *

குறிகாட்டுவான் நெடுந்தீவு படகுச் சேவை ரத்துச் செய்யப்பட்டதை அடுத்து இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாக இருந்த நெடுந்தீவு மேற்கு நெழுவினி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் பின்போடப்பட்டுள்ளது. [இ-111]

## தேவை

மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை பல் தொழிற் பயிற்சி நிறுவனத்திற்கு [Vocational Training Centre] தையல், மனையியல், கைப்பணி ஆகிய பாடங்களைக் கற்பிக்க ஆசிரியர்கள் தேவை. 20 - 04 - 91 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

தலைவர்,
V. T. C. கிறீன் ஞாபகார்த்த
வைத்தியசாலை,
மானிப்பாய். [சி-4823]

---

வெளிவந்துவிட்டது - விற்பனையாகின்றன

## S. L. E. A. S. பரீட்சைக்கான வழிகாட்டி

நுண்ணறிவு / கிரகித்தல் / விடயஆய்வு

[நடைபெற்ற பரீட்சை வினா - விடைகளுடன்]

கேட்டு வாங்குங்கள் - **அஸ்ரன் வெளியீடு.**

[எல்லாப் புத்தகசாலைகளிலும் பெறலாம்] [சி-4819]

---

## 1ஆம் ஆண்டு நினைவு தினம்



தோற்றம்: 20 - 7 - 1921

மறைவு: 17 - 3 - 1990

திதி: 5 - 4 - 1991

### அமரர் பூரணம் இராமலிங்கம்

உற்றார், உறவினர்கள் நலம் பேண அரிய பல நன்மைகள் புரிந்த தூய உள்ளம் கொண்ட தாயே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவுடன் வாழும்:
அன்புப்பிள்ளைகள்- சிவம், லோகு, குணம்,
மருமகள்மார்- ரூபா, நகுலா, பத்மா,
பேரப்பிள்ளைகள்.

குழுக்கண்டி ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். [16283]

---

## நீங்காத நினைவில் முதலாம் ஆண்டு



### அமரர் க. வேலுப்பிள்ளை

உதிர்வு: 5 - 4 - 1990

குடும்பத்தின் ஒளி விளக்காய், தருமத்தின் உறைவிடமாய், தொழிலில் வழிகாட்டியாய் திகழ்ந்து, இறைவனின் பாதகமலங்களை அடைந்து 12 மாதங்கள் உருண்டோடி விட்டன. எங்கள் இதயக் கோவிலில் என்றென்றும் நீங்கள் இருப்பீர்கள். உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

569, கே. கே. எஸ் றோட்,
யாழ்ப்பாணம். [16304]

---

## பூப்பு நீராட்டு விழா
## ★ அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் பிரமோதூத வருடம் பங்குனி மாதம் 23ஆம் நாள் [06 - 04 - 1991] சனிக்கிழமை பகல் 12-00 மணி தொடக்கம் 1-00 மணிவரையில் வரும் சுபமுகூர்த்தத்தில்,

எமது சிரேஸ்ட புத்திரி
திருநிறை செல்வி
★ சுஜாதா ★
அவர்களுக்கு

மங்கள நீராட்ட பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசமேதரராய் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து வைபவத்தை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்:
K· சிவஞானம் சுசிலா தம்பதியினர்

91/1, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை. [16309]

---

எமது மக்கள் படும் துயரங்கள் நீங்க
இறையருள் வேண்டி நடாத்தப்படும்

## சர்வசமய கூட்டுப் பிரார்த்தனை

இடம் : நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபம்
காலம் : 5-4-1991 வெள்ளிக்கிழமை
மாலை 4·00 மணி

அனைத்து மக்களையும் இப்பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

— அமைப்புக் குழு

[சி/5917]

---

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணகம்: 17-3-1917



விண்ணகம்: 05-4-1988

### அமரர் சித்தம்மா முத்தையா

எங்கள் குடும்ப ஒளிவிளக்காய் நின்று எம்மை வாழ்வித்த அன்புத் தெய்வமே! ஆண்டு மூன்று கழிந்ததம்மா ஆயிரம் ஆண்டுகள் கழிந்தாலும் ஆறிடுமோ எம் துயர், உங்கள் ஆத்மா சாந்தியடைய மாதாவை பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்,
அன்புக் கணவர் [முத்தையா],
மகன் டோமினிக்சர்வே
[சுவிஸ்சலாந்து],
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

62/1, டேவிற் றோட்,
யாழ்ப்பாணம். [16358]

---

## மரண அறிவித்தல்

### திரு. இளையதம்பி மாணிக்கம்

[இளைப்பாறிய C. T. B சாரதி]

உரும்பராயைச் சேர்ந்த இளையதம்பி மாணிக்கம் 4-4-91 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலம் சென்ற சின்னம்மாவின் அன்புக் கணவரும், இராஜேஸ்வரி, மகாலிங்கம், யோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் கணேசபதி, காலஞ்சென்ற குகதீசன், செல்வினி ஆகியோரின் மாமனாரும், காலம் சென்றவர்களான பொன்னுத்துரை, சின்னத்துரை ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பராய் வேம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

[16312] தகவல்: பிள்ளைகள், மருமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### மனமே மூலம்

தமிழ் மக்கள் படும் துயரங்கள், இன்னல்கள், இம்சைகள் நீங்க இறையருள் வேண்டி இன்று நல்லூரில், திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில், சர்வமத பிரார்த்தனை நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. பொதுமக்களுடன், இந்து, கிறிஸ்தவ மதகுருமார்களும் இந்தக் கூட்டுப் பிரார்த்தனையில் பங்குபற்ற உள்ளனர்.

இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த நாளில் இருந்து தமிழர்கள் அடிமைகளாக்கப் பட்டுள்ளனர். அந்த நிலை நீங்க வேண்டும், உடைத்தெறியப்படவேண்டும் என்பதற்காக அவர்கள் நீண்டகாலமாகப் போராடி வருகிறார்கள். போராட்டம் கடந்த ஒரு தசாப்தமாக முக்கிய கட்டத்தை அடைந்திருக்கிறது.

உரிமைப் போராட்டம் முக்கிய கட்டத்தை அடைந்ததில் இருந்து தமிழ் மக்களுக்கு ஏற்பட்டு வரும் சோதனைகள், வேதனைகள், இன்னல்கள், இழப்புகள் ஏராளம், ஏராளம். அவை எழுத்தில் வடிக்க முடியாதவை. வாழ்வா, சாவா என்ற உயிர்ப் போராட்டமாக, வாழ்வுரிமைப் போராட்டமாக அவர்களது வாழ்க்கை மாறி விட்டது. அரசினாலும், அதனைச் சேர்ந்த படையினராலும் தமிழர்கள் அற்ப சீவராசிகளை விட அற்பர்களாக நடத்தப்படுகின்றனர்.

தமிழர்களின் வாழ்க்கையியல் சம்பந்தப்பட்ட சகல துறைகளையும் சிங்கள அரசும், அது தம் படைகளும் மேய்ந்து வருவது போலவே, அவர்களின் ஆன்மீகத் துறையும் தீண்டப்படுகிறது; நோண்டப்படுகிறது. ஆலயங்கள், தேவாலயங்கள் ஆயிரக்கணக்கில் ஆயுதப்படையினரால் நிர்மூலமாக்கப்பட்டு விட்டன. மதகுருமாரும் தாக்கப்பட்டுள்ளனர், கொல்லப்பட்டதும் உண்டு.

தமிழர்களின் எல்லாப் பலங்களையும் நொறுக்குவது போல, அவர்களின் ஆன்மீக பலத்தையும் உடைத்துவிட வேண்டும் என்பது சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் உள்ளார்ந்த நோக்கம். அதற்கு எள்ளளவேனும் இடம் தரலாகாது.

எந்தப் பலம் குறைந்து போனாலும் எங்கள் ஆத்மீக பலம் தேய்ந்து போக இடந்தரக்கூடாது. ஏனெனில், எல்லாம் இழந்து போயிற்று என்ற இறுதிக் கட்டம் வரினும், மனவலிமையும், துணிவும். உந்துதலும் தரவல்ல சக்தி ஆத்மபலம் ஒன்றிடமே உண்டு.

அந்த ஆத்ம பலத்தைப் பெருக்க வல்லது தியானம் என்ற மன ஒருமைப்பாடே. தியானத்தின் ஓரங்கமே பிரார்த்தனை; அதன் மூலம் துன்பத்தை இன்பமாகக் காணும் மனப் பக்குவம், மனச் சமநிலை வந்து விட்டால் எடுத்த காரியத்தில் வெற்றியே அன்றித் தோல்வி அணுகாது. ஏனெனில் கீதை கூறுவது போல, எல்லாவற்றுக்கும் மூலமாய் இருப்பது மனம். மனதில் ஒருமைப்பாடு இருந்தால் எல்லாவற்றிலும் ஒருமைப்பாடு இருக்கும்.

இன்றைய சர்வமத பிரார்த்தனை ஆன்ம பலத்தைத் தேடும் ஆரம்பப் புள்ளியாகட்டும். ஒரு நாளைக்கு மட்டுமன்றி ஒவ்வொரு நாளும், வாரந்தோறும், மாதந்தோறும் நடந்தாலும் அதனால் நற்பயன் விளையும்.

## தங்கம் கடத்திய தமிழருக்கு ரூ. 2 கோடி அபராதம்!

சிங்கப்பூரில் இருந்து தங்கப் பாளங்களைக் கடத்தி வந்த எயாலங்கா ஊழியர் ஸ்ரீனிவாசன் இராமச்சந்திரா என்பவருக்கு சுங்கத்திணைக்களம் ஒரு கோடி 90 லட்சம் ரூபா அபராதம் விதித்தது. 100 தங்கப்பாளங்களும் பறிமுதல் செய்யப்பட்டன. அவற்றின் பெறுமதி 65 லட்சம் ரூபா என்று சொல்லப் படுகிறது.

அபராதம் செலுத்தத் தவறியதைத் தொடர்ந்து சந்தேக நபர் இரகசியப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். [உ-எ]

## அன்னை பூபதி பொதுஅறிவு போட்டியில் பரிசில்கள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

மாணவர்களுக்கான அன்னைபூபதி பொது அறிவுப் போட்டிப் பரீட்சையில் பல்வேறு பரிசில்கள் வழங்கப் பட உள்ளன. அவையாவன:-

★ விசேட சித்திபெறும் மாணவர்களுக்கு

★ அதிவிசேட சித்திபெறும் மாணவர்களுக்கு

★ கொத்தணி ரீதியாக ஆகக்கூடிய புள்ளிகள் பெறும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கப்படும். சுற்றாடல், சமூகக்கல்வி, வரலாறு ஆகியவை தொடர்பாக இரண்டுநாள் விசேட பயிற்சி வழங்கப்படும். அத்துடன் நான்கு நாள் சுற்றுலா ஒன்றும் ஒழுங்கு செய்யப்படும்.

★ மாவட்ட ரீதியாக முன்னணி வகித்த பாடசாலைகளுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

பரீட்சார்த்திகளுக்கான தகைமைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன அவையாவன:-

'அன்னைபூபதி சாதாரண தர அறிவுப் போட்டி' 15 வயதுக்கு உட்பட்டவர்களுக்கானது.

'அன்னைபூபதி உயர்தர பிரிவு பொது அறிவுப்போட்டி' 15 வயதுக்கும், 21 வயதுக்கும் உட்பட்டவர்களுக்கும் ஆனது.

கல்வி நிறுவனங்களுக்குச் செல்வோர், செல்லாதோர் என்ற பாகுபாடு கணக்கில் கொள்ளப்படமாட்டாது. [இ]

## தேயிலை ஏற்றுமதியில் இலங்கை முந்தியது!

கொழும்பு, ஏப்ரல் 5

தேயிலை ஏற்றுமதியில் இலங்கை, இந்தியாவை முந்தி விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு இலங்கை ஒரு கோடி 11 லட்சம் கிலோ கிறாம் தேயிலையை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது. இந்தியா கடந்த ஆண்டு ஏற்றுமதி செய்த தேயிலையிலும் பார்க்க இது பத்து லட்சம் கிலோ கிறாம் அதிகமாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

ஈரான், சிரியா, சோவியத் யூனியன், லிபியா மற்றும் ஐக்கிய அரபுக் குடியரசு நாடுகளில் இலங்கைத் தேயிலைக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டது. [உ-எ]

## நிவாரணப் பொருள்கள் வவுனியாவில் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 5

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமாக வழங்குவதற்கெனக் கொண்டுவரப்பட்ட உணவுப் பொருள்களைக் கொண்டு வரவிடாமல் வவுனியாவில் இராணுவம் தடுத்து வைத்துள்ளது.

தொண்டர் நிறுவனம் ஒன்று, கொழும்பில் கூட்டுப் படைத் தலைமை அலுவலகத்தின் அனுமதி பெற்றுக் கொண்டு வந்த உணவுப் பொருள்களை வவுனியாவில் உள்ள இராணுவத்தினர் தடுத்து வைத்துள்ளனர்.

கூட்டுப்படைத் தலைமையகத்தின் உத்தரவை உதாசீனம் செய்யும் விதத்தில் வவுனியா இராணுவத்தினர் நடந்து கொள்வதால் நிவாரணப் பொருள்களைக் கொண்டு வருவது இனிமேல் சிரமமானதாக இருக்கலாம் என்று சம்பந்தப்பட்ட தொண்டர் நிறுவனப் பிரமுகர் ஒருவர் கவலை தெரிவித்தார். [அ-15]

### மீன் கறியால் வந்த வினை

புளியங்கூடல், ஏப். 5

பெரிய ரக மீனை வாங்கி கறி சமைத்துச் சாப்பிட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் வயிற்றோட்டம் ஏற்பட்டு வேலணை அரசினர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

புளியங்கூடல் பகுதியில் செவ்வாயன்று இச்சம்பவம் இடம்பெற்றது.

கந்தையா செல்வரட்ணம் [வயது 60], அவரது மனைவி லட்சுமி [வயது 52], பிள்ளைகளான ஆனந்தன் [வயது 30], ரவி [வயது 19], ரதி [வயது 15], சுதா [வயது 13] ஆகியோரே ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். [உ-125]

## இலங்கைத் தமிழ் அகதிகள் அரசியலில் ஈடுபடத் தடை

சென்னை, ஏப்ரல் 4

தமிழ்நாட்டில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் அரசியல் விவகாரங்களில் ஈடுபடக்கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது.

தமிழ்நாட்டில் முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் எந்த அரசியல் கட்சியையும் சாராதவர்களாக இருக்கவேண்டும் என்று மறுவாழ்வுத்துறை சிறப்பு ஆணையாளர் திரு. சி. எம். இராம்தாஸ் பணித்து இருக்கிறார்.

இலங்கைத் தமிழ் அகதிகளுக்காக இதுவரை இருபத்தொரு கோடி ரூபா செலவழிக்கப்பட்டிருப்பதாகவும்—

இதில் 16 கோடி ரூபா மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ள [illegible] [இ-எ]

### கலந்துரையாடல்

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறையினர் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு இளம் ஓவியர்களிலருடன் கலை அனுபவம் பற்றிய கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்றை நடத்துகின்றனர்.

## நெடுந்தீவு - குறிகாட்டுவான் படகுச் சேவைகள் ரத்து

கடந்த திங்கட்கிழமை முதல் நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவுகளுக்கான படகுச் சேவைகள் நடைபெறவில்லை.

தவிர்க்க முடியாத காரணங்களால் படகுச் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

திங்கட்கிழமை காலை நயினாதீவு, நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு ஆகிய இடங்களில் இருந்து குறிகட்டுவான் வந்து சேர்ந்த படகுகள், சேவை நிறுத்தப்பட்டதால் திரும்பிச் செல்லவில்லை.

அதனால் அவற்றில் திரும்பிச் செல்லவென வந்தவர்கள் புங்குடுதீவிலேயே தங்க நேர்ந்துள்ளது. [இ-111-131]

## ராமர் கோவில் விவகாரம்: புதுடில்லியில் நேற்று பிரமாண்டமான பேரணி

புதுடில்லி, ஏப். 5

ராமர் கோயில் கட்டும் பிரச்சினையை முன்வைத்து விஷ்வ இந்து பரிஷத் நேற்று புதுடில்லியில் பிரமாண்டமான ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தியது.

சுமார் 3 லட்சம் இந்துக்கள் அந்தப் பேரணியில் கலந்து கொண்டனர் என்று மதிப்பிடப்பட்டது.

தலைநகர் புதுடில்லியில் அண்மைக் காலத்தில் நடத்தப்பட்ட எந்தப் பேரணியிலும் இந்த அளவு மக்கள் கலந்து கொள்ளவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

பாரதிய ஜனதாக் கட்சித் தலைவர்களான அத்வாணி, அட்டல் பிஹாரி, வாஜ்பாய் மற்றும் டாக்டர் முரளி மனோகர் ஜோஷி ஆகியோர் அப்பேரணியில் கலந்து கொண்டு பேசினர். [அ-எ]

### நிவாரணக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

1988 ஆம் ஆண்டுக்கு முன் இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்று திரும்பிய — கரவெட்டி, மருதங்கேணி, பருத்தித்துறை ஆகிய உதவி அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கான — நிவாரணக் கொடுப்பனவுகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து வழங்கப்படவுள்ளன. [உ-5]

## 17 பேர் இன்று விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 5

விடுதலைப் புலிகளினால் பல்வேறு காரணங்களுக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த 17 பேர் நாளை காலை விடுவிக்கப்பட இருக்கின்றனர்.

கோண்டாவிலில் உள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்டச் செயலகத்தில் வைத்து நாளை காலை 10 மணிக்கு இவர்கள் விடுவிக்கப்படுவர்.

விடுவிக்கப்படுவோர் பெயர் விபரம் வருமாறு:-

புண்ணியமூர்த்தி திருநாவுக்கரசு [அச்சுவேலி], சின்னத்தம்பி தேவராஜா [மட்டக்களப்பு], இன்னராஜா ஜெயராசா [அச்சுவேலி], மாணிக்கம் செல்வமாணிக்கம் [பருத்தித்துறை], டேவிற் வல்லிபுரம் ஜெயபாலன் [மானிப்பாய்], அமலன் குருஸ் டெஸ்மன் [மன்னார்].

சிறீகரன் சத்தீஸ்சன் [பண்டத்தரிப்பு], செல்லையா குகநாதன் [திருகோணமலை], பொன்னுத்துரை பஞ்சலிங்கம் [கிளிநொச்சி], கதிரேசன் கொன்சன் [கிளிநொச்சி]. வடிவேல் நல்லதம்பி [கிளிநொச்சி]. வேலு இராய்குமார் [வவுனியா].

செல்லத்துரை ரவிக்குமார் [வவுனியா], சண்முகம் பாஸ்கரன் [மட்டக்களப்பு], செல்வராசா பவளதாஸ் [திருகோணமலை]. நாகன் திகேகேஸ்வரன் [மயிலிட்டி], முருகசாமி பளனிச்சாமி [உடுவில்]. [உ]

### நானாட்டான்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தரப்பில் லிவகாந்தன் [சி. தவநேசன்—சுன்னாகம்] வீரமரணமடைந்தார்.

நேற்று முன்தினம் நடந்த சண்டையில் 2ஆவது லெப்டினன்ட் வசிட்டன் [அ. நாகராசா - நானாட்டான்], மகாலிங்கம் [புண்ணியகுமார் இராசையாச் செட்டியார் - அடம்பன்], சந்தாம்பிள்ளை திருச்செல்வம் சகாயநாதன் - மன்னார்], புவிராஜ் [யோ. ஜேம்ஸன் - செட்டிகுளம்] ஆகிய நான்கு போராளிகளும் வீர மரணமடைந்தனர்.

இதேவேளை —

புதன் காலை 7 மணிமுதல் நானாட்டான் பகுதியில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சுகளினால் நானாட்டான் குடியிருப்புப் பகுதிகள் பெருமளவில் அழிந்துபோனதாகத் தெரிவிக்கப்படுகிறது. [உ]

### படையினர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அத்தாக்குதலில் படையினருக்கு ஏற்பட்ட உயிரிழப்புக் குறித்து அரசு வெளியிட்ட எண்ணிக்கையை வெளியிடவில்லை.

அதற்குப் பதிலாக ''வரவர அரசினால் வெளியிடப்படும் உயிரிழப்புப் பற்றிய எண்ணிக்கை விவரங்கள் நம்ப முடியாதவையாக இருக்கின்றன'' — என்று பி.பி.சி.யின் கொழும்புச் செய்தியாளர் தெரிவித்த கருத்து ஒலிபரப்பியது. [அ-எ]

### காரைநகர்ப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யிடையே ஹெலியிலிருந்து கிரனேட் வீச்சுக்களும் இடம் பெற்றன.

இதேவேளை கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்களையும், ஷெல் துப்பாக்கிப் பிரயோகங்களையும் மேற்கொண்டிருந்தனர். அழிந்த அவ்ரோ மேற்கொண்ட தாக்குதலினால் புதுறோட் பகுதியில் மட்டும் 4 வீடுகளும், அரிசிஆலை ஒன்றும் சேதமடைந்தன. மேலும் பல கட்டடங்கள் இத்தாக்குதல்களினால் அழிந்தன.

பலாலியிலிருந்தும் அவ்வப்போது காரைநகர்ப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. [உ-3-15]

### வவுனியா...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தினம் பம்பைமடு வந்தபோது அவர்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலில் இராணுவத் தரப்பில் ஏற்பட்ட சேத விவரம் தெரியவில்லை. விடுதலைப் புலிகள் தரப்பில் துரோணன் [வவுனியா] வீரமரணம் அடைந்தார்.

தாக்குதல் சம்பவத்தின் பின்னர் இப்பகுதியிலிருந்து ரி 56 மகஸின் — 3, ஜே. ஆர். குண்டு — 2, ஐ. எம். ரவைகள் —90 ஆகியன விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டன. [உ-3-15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக் மீது கடுமையான நிபந்தனை; ஐ. நா. பாதுகாப்புச் சபை தீர்மானம்

வாஷிங்டன், ஏப். 5

வளைகுடாவில் நிரந்தரப் போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்த ஈராக்குக்குப் பல கடுமையான நிபந்தனைகளை விதித்து ஐ நா. பாதுகாப்புச் சபை தீர்மானம் ஒன்றை நேற்று நிறைவேற்றியது.

சபையின் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளான அமெரிக்கா, சோவியத் யூனியன், சீனா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகியன தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தன.

நிரந்தரமற்ற 10 உறுப்பு நாடுகளின் இந்தியா உட்பட ஏழு நாடுகள் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்தன.

கியூபா மட்டுமே எதிர்த்து வாக்களித்தது. யேமனும், ஈகுவடோரும் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

நிபந்தனைகளை ஏற்றால் தான் முறையான யுத்த நிறுத்தம் ஒன்றை ஐ. நா. பாதுகாப்புச் சபை பிரகடனப்படுத்தும் என்று தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

நிபந்தனைகள் வருமாறு:-

★ தன்னிடமுள்ள இரசாயன, நுண்ணுயிர்க் கிருமி ஆயுதங்கள் அனைத்தையும் ஐ. நா. மேற்பார்வையின் கீழ் ஈராக் அழிக்க வேண்டும்.

★ 150 கிலோ மீற்றருக்கு அப்பால் பாய்ந்து செல்லக் கூடிய ஏவுகணைகள் அனைத்தையும் ஈராக் அழிக்க வேண்டும்.

★ தீர்மானம் நிறைவேற்றப்பட்ட நாளில் இருந்து 90 தினங்களுக்குள் ஆயுத ஒழிப்பு இடம்பெற வேண்டும்.

★ 1963 ஆம் ஆண்டு வரையறுக்கப்பட்ட குவைத்துடனான எல்லையை ஈராக் கௌரவிக்க வேண்டும்

எல்லையில் இருந்து ஈராக்கினுள் பத்துமைல் தூரம் வரையும். குவைத்தினுள் 5 மைல் தூரம் வரையும இராணுவ சூன்ய பிரதேசமாக இருக்க வேண்டும். இப்பிரதேசத்தை கண்காணிக்க ஐ நா. அவதானிகள் குழு அமைக்கப்படும்.

★ சகலவிதமான பயங்கரவாத நடவடிக்கைகளையும் கைவிடுவது என்று ஈராக் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.

★ யுத்த செலவினத்தை ஈடுசெய்ய ஈராக் தனது எண்ணெய் வருமானத்தில் ஒரு பங்கை அதற்கான விசேட நிதிக்கு வழங்க வேண்டும்.

— முன்கண்ட நிபந்தனைகளை ஏற்பதாக ஈராக் அறிவித்தவுடன் முறையான யுத்த நிறுத்தம் நடைமுறைக்கு வரும் என்றும் ஐ நா. பாதுகாப்புச் சபைத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் சரித்திரத்திலேயே நீண்டதும் விரிவானதும் தனித்துவமானதுமான தீர்மானமாக இது அமைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. [உ-எ]

## வேப்பங்குளம் பகுதியில் மேலும் ஆயுதங்கள் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப் 5

கடந்த 30 ஆம் திகதி மன்னார் வேப்டங்குளத்தில் இராணுவத்தினருடன் சண்டை நடந்த இடத்தில் இருந்து மேலும் பல ஆயுதங்களை விடுதலைப் புலிகள் மீட்டு எடுத்தனர்.

5. 56 ரக ரவைகள்-1,300, 203 ரக [டொங்கான்] ஷெல் — 14, ஜே: ஆர் கிரனேட் — 3, மினிமினி எக்ஸ்ட்ரா பரல் — 1, எல். என். ஸிமசஸின் - 5 மற்றும் பராலைட் என்பனவே மீட்கப்பட்டன.

அப்பகுதியில் மற்றும் ஒரு இராணுவச்சிப்பாயின் சடலம் உருக்குலைந்த நிலையில் காணப்பட்டதாகத் தெரிய வந்தது. [உ]

## கூட்டம்

தென்மாராட்சி ஏப்ரல் 5

சாவகச்சேரி நகரசபை ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் 12 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று பி. ப. 2-00 மணிக்கு சங்கத் தலைவர் த. நவரத்தினராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

## புங்குடுதீவில் ஒதுங்கிய இனந் தெரியாத படகு

புங்குடுதீவின் தெற்குப் பகுதியில், இனந்தெரியாத படகு ஒன்று கரை ஒதுங்கி உள்ளது.

கடந்த செவ்வாய்க் கிழமை இரவு சுமார் 7 மணியளவில் கரை ஒதுங்கிய பிரஸ்தாப படகில் துப்பாக்கிச் சூட்டு அடையாளங்கள் காணப்படுகின்றன.

மன்னார் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற மோதல்களின் போது சிக்குண்டு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இது பழுதடைந்து கரை ஒதுங்கி இருக்கலாம் எனச் சந்தேகிக்கப் படுகிறது.

இந்தப் படகு யாருக்குச் சொந்தமானது என்பது குறித்தோ அல்லது அதில் பயணம் செய்தவர்கள் என்ன ஆனார்கள் என்பது குறித்தோ எவ்வித தகவலும் தெரியவில்லை.

புதன்கிழமை வரை எவரும் படகிற்கு உரிமையும் கோரவில்லை. [அ-131]

## உத்திரப் பிரதேசத்திலும் சட்டசபை கலைப்பு

லக்னோ, ஏப் 5

உத்திரப்பிரதேச மாநில சட்டசபையை ஆளுநர் சத்திய நாராயணரெட்டி நேற்று கலைத்தார்.

ஜனதாதள் [எஸ்] கட்சி அரசுக்கு வழங்கி வந்த ஆதரவை விலக்கிக் கொள்வதாக இந்திரா காங்கிரஸ் கட்சி அறிவித்ததைத் தொடர்ந்து, சட்டசபையைக் கலைக்கும்படி முதலமைச்சர் முலாயம் சிங் யாதவ் ஆளுநருக்குச் சிபார்சு செய்திருந்தார்.

இதே வேளை—

அங்கு ஜனாதிபதி ஆட்சியைப் பிறப்பிக்கும் படி இந்திரா காங்கிரஸ், பாரதிய ஜனதா, ஜனதா தள் ஆகிய கட்சிகள் ஜனாதிபதியைக் கோரியுள்ளன.

கலைக்கப்பட்ட சட்டசபையில் மொத்த உறுப்பினர்கள் 425. அவர்களில் 125 பேர் ஜனதா தள் [எஸ்] கட்சியினர். 94 பேர் இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆவர். [உ-எ]

## விபத்தில் மாணவி பலி!

யாழ்ப்பாணம், ஏப் 5

கொடிகாமம் சந்தியில் நேற்று முன்தினம் இடம் பெற்றவான்— சைக்கிள் விபத்தில் காயமடைந்து, யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த வரணி எருவனைச் சேர்ந்த யோகராசா மாலினி [வயது 14] என்ற மாணவி நேற்று அதிகாலை 1-30 மணிக்கு ஆஸ்பத்திரியில் மரணமானார்.

விபத்திற்குள்ளான நேரத்திலிருந்து மரணமடையும் வரை இம் மாணவி நினைவிழந்த நிலையிலேயே காணப்பட்டார். [உ-15-117]

## கொழும்பு செல்லும் நோயாளருக்கு!

யாழ்ப்பாணம், ஏப் 5

வைத்திய சிகிச்சை பெறுவதற்குக் கொழும்பு செல்வதற்குச் சிபார்சு செய்யப்பட்டுள்ள நோயாளிகளையும், அவர்களுக்கு உதவியாகச் செல்வோரையும் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு முன் யாழ். ஆஸ்பதிரிக்கு சமுகம் கொடுக்குமாறு ஆஸ்பத்திரி நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர்.

இதே வேளை, கொழும்பு செல்வதற்கென்று மார்ச் 27, 29 ஆம் திகதிகளில் யாழ். ஆஸ்பத்திரியில் பதிவு செய்தவர்கள் ஆகியோரில் அனுமதி கிடைக்காதவர்கள் தமக்கு இப்போது அனுமதி கிடைத்துள்ளதா என்பதை உடனடியாக ஆஸ்பத்திரியுடன் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். [அ-15]

## பண்டத்தரிப்பு அதிபர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 5

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த கொத்தணி அதிபர்களின் விசேட கூட்டம் ஒன்று நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

காரைநகர் கொத்தணியைச் சேர்ந்த சகல அதிபர்களையும் அன்று காலை 9 மணிக்கு மேற்படி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் கூடுமாறும் கோட்டக் கல்வி அதிகாரி திரு. ப. [illegible] ராசா கேட்டுள்ளார். [உ-எ]

---

இலங்கை ஆசிரியர் சங்கம்

யாழ். மாவட்டக் கிளை

### வடமாகாண ஆசிரியர் சங்கம்

54, ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை, யாழ்ப்பாணம்

## கருத்தரங்கு

இலங்கை கல்வி நிர்வாக சேவையின் III ஆம் வகுப்புக்கு ஆட் சேர்ப்பதற்கான வரையறுத்த போட்டிப் பரீட்சை ஏப்ரல் 1991- இப்பரீட்சைக்குத் தோற்றுவோரின் நன்மை கருதி ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது.

இடம்:- கொக்குவில் இந்துக் கல்லூரி

காலம்:- 07- 04- 1991 ஞாயிற்றுக்கிழமை

மு. ப. 9 மணிமுதல் பி. ப. 2-30 வரை

கருத்துரை வழங்குபவர்கள்:

1. திரு. அ. பஞ்சலிங்கம்
   அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி
2. திரு. நா தணிகாசலம்பிள்ளை
   கல்வி அதிகாரி, முகாமைத்துவம்
3. திரு. த. முத்துக்குமாரசாமி
   அதிபர், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
4. திரு. இ. கணேசன்
   அதிபர்

த. தேவராஜா
தலைவர்:
இந்துக் கல்லூரி,
கொக்குவில்.

வே. சிவராஜா
செயலாளர்:
சைவப்பிரகாச வித்தியாசாலை,
சந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

[16355]

---

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை இராமநாதன்

நாரந்தனை கிழக்கு ஊர்காவற்றுறையைச் சேர்ந்த திரு. வேலுப்பிள்ளை இராமநாதன் 4-4-91இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திருமதி தங்கம்மாவின் அன்புக் கணவரும். கேதாரநாதன் [வருமானவரித் திணைக்களம், கொழும்பு], இரகுநாதன் [வர்த்தகர் V S M. ஸ்ரோர்ஸ், அச்சுரஸ்ஸ], திருஞானசம்பந்தன் [கிராம சேவையாளர், நயினாமடு] பரமேஸ்வரி, சகுந்தலா தேவி, பேரின்பநாயகி [ஜேர்மனி] ஆகியோரின் அன்புத் தந்தையும். திருமதி நே கேதாரநாதன் [கச்சேரி, யாழ்ப்பாணம்] சரவணபவான் [ஜேர்மனி], லோகேஸ்வரி. பேரானந்ததவமணி, சண்முகலிங்கம் [ஜேர்மனி] ஆகியோரின் அன்பு மாமனாரும், ரவிதரன், சுகானந்தினி புவிதான், அருணோதயன், சுதர்சன், தாரிணி, யாழினி, கவிதா, சுகஸ்தன், கல்பனா, மாதங்கி, மதுரன், தீபா, தேசிகன், தக்ஷன் [ஜேர்மனி] ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 5 4-91 காலை 9 00 மணிக்கு நடைபெற்று, நாரந்தனை இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் : இ. திருஞானசம்பந்தன்
நாரந்தனை கிழக்கு,
ஊர்காவற்றுறை.

[16311]

## செல்லையா இரத்தினம்

கலைமகள் வீதி, நல்லூர் வடக்கைச் சேர்ந்த செல்லையா இரத்தினம் காலமாகிவிட்டார்.

அன்னார் அன்னபூரணியின் அன்புக் கணவரும் மகேந்திரநாதன் [அன்ட்றீஸ் கொம்பனி], இராசேஷ்வரி [ஆசிரியை கோப்பாய் மகாவித்தியாலயம்], குணேந்திரன் [காப்புறுதி முகவர்—உரிமையாளர் K. S. R K. மில்லர் கல்வியங்காடு], சற்குணநாதன் [ஆசிரியர் வண்ணை நாவலர் மாவித்தியாலயம்] ஜெகதீஸ்வரி, காந்திமதி ஆகியோரின் அன்புத் தந்தையும், சபாபதி, ஸ்ரீரட்ணகுமார், சற்குணராணி ஆகியோரின் அன்பு மாமனாரும், சுலக்ஷ்னா, சுஜீவ்காந், தக்சாயினி, லதன் மயூறி நிறேஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்

அன்னாரின் ஈமைக்கிரியைகள் அவரது இல்லத்தில் [05-04-91] இன்று நடைபெற்று 4 00 மணியளவில் செம்மணி மயானத்திற்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு.

தகவல்:
குணேந்திரன்
[மகன்]

[16310]

## திருமதி தவமணி பஞ்சலிங்கம்

இல: 110/2 கண்டி வீதியைச் சேர்ந்த திருமதி தவமணி பஞ்சலிங்கம் காலமானார் இவர் காலஞ்சென்ற திரு கந்தையா பஞ்சலிங்கத்தின் அன்புமனைவியும், தளிர்வதனன், பரணீதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு சின்னத்தம்பி பொன்னையா, காலஞ் சென்ற திருமதி பவளம்மா பொன்னையாவின் மூத்த மகளும், திரு பொ. அருளானந்தம் [தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் பரந்தன்], திரு. பொ. போகானந்தம், பொ. சச்சிதானந்தம் [ஜேர்மனி], பொ. கவின்செல்வன் [அவுஸ்திரேலியா], திருமதி தேவமணி அமிர்தலிங்கம் [இலங்கைக் காப்புறுதி கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்], திருமதி புனிதமணி தேவச்சந்திரன் [டென்மார்க்] ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 5 - 4 - 91 இன்று காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
சி. பொ. அருளானந்தம்
110/2, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

[16359]

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 05 - 04 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org